தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, மார்ச் 27, திங்கட்கிழமை

பங்குனி 14, விபவ—திருவள்ளுவர் ஆண்டு—2026

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

‘‘ உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து ’’

எண்ணுவது எல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை மட்டும் விடக் கூடாது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. செ. கோ. விஸ்வநாதன் அவர்கள் 5–3–1989 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. செ. கோ. விஸ்வநாதன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரை செங்கற்பட்டு மாவட்டம் செங்கற்பட்டு தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

டி-2. 53-25—1